சுகாதார அமைச்சு | கல்வி அமைச்சு

Ontario

# பாடசாலை மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கான COVID-19 முன்பரிசோதனை

பதிப்பு 4: பெப்ரவரி 24, 2021

**பாடசாலைக்கு அல்லது சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்வதற்கு முன்பாக தினமும் மாணவர்கள் மற்றும் சிறுவர்களில் COVID-19 முன்பரிசோதனை செய்யப்படல் அவசியமாகும். மாணவர் ஒருவரின் சார்பில் பெற்றோர்/பாதுகாவலர்கள் இதனைப் பூர்த்திசெய்யலாம்.**

திகதி (mm-dd-yyyy) ________________

## முன்பரிசோதிப்புக்கான கேள்விகள்

1. **கடந்த 14 நாட்களில், மாணவர்/சிறுவர் அல்லது அவரின் வீட்டில் இருப்பவர்களில் எவராவது கனடாவுக்கு வெளியே பயணம் செய்திருக்கின்றாரா?** ☐ ஆம் ☐ இல்லை
   *தொற்றொதுக்கத்துக்கான தேவைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தால் (உதாரணத்துக்கு, தொழிலுக்காக கனடா-அமெரிக்க எல்லையைத் கடக்க வேண்டியிருக்கும் அத்தியாவசிய வேலைசெய்யும் ஒரு பணியாளர்), "இல்லை" என்பதைத் தெரிவுசெய்யவும்.*

2. **மருத்துவர், ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குநர் அல்லது பொதுச் சுகாதாரப் பிரிவினர் ஒருவர் மாணவர்/சிறுவர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் (வீட்டில் இருக்கவேண்டும்) என உங்களுக்குச் சொல்லியிருக்கின்றாரா?** ☐ ஆம் ☐ இல்லை
   *தொற்றுப்பரவல் அல்லது தொடர்புத் தடமறிதல் ஒன்று இதற்குக் காரணமாக இருக்கலாம்.*

3. **தற்போது COVID-19 நோய் இருக்கும் ஒருவருடன் "நெருங்கிய தொடர்பு" கொண்டிருந்தவர் என மாணவர்/சிறுவர் கடந்த 14 நாட்களுக்குள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறாரா?** ☐ ஆம் ☐ இல்லை

4. **COVIDக்கு வெளிப்படுத்தபட்டது தொடர்பான எச்சரிக்கை அறிவிப்பு ஒன்று கடந்த 14 நாட்களில் மாணவரின்/சிறுவரின் கையடக்கத் தொலைபேசிக்கு (cell phone) வந்திருந்ததா?** ☐ ஆம் ☐ இல்லை
   *ஏற்கனவே அவருக்கு செய்யப்பட்ட பரிசோதனை ஒன்றில் எதிர்மறையான முடிவை அவர் பெற்றிருந்தால், "இல்லை" என்பதைத் தெரிவுசெய்யவும்.*

5. **மாணவருக்கு/சிறுவருக்குப் பின்வரும் நோய்க்குறிகளில் ஏதாவது ஒன்று தற்போது இருக்கிறதா?**
   புதிய, மோசமாகியிருக்கும், மற்றும் அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது அவர்களுக்கு ஏற்கனவே இருக்கும் மருத்துவ நிலைமைகளுடன் தொடர்பில்லாத அனைத்தையும் தயவுசெய்து தெரிவுசெய்யுங்கள்.

---

**காய்ச்சல் மற்றும்/அல்லது குளிர்நடுக்கம்** ☐ ஆம் ☐ இல்லை
உடல்வெப்பநிலை 37.8 பாகை C/100 பாகை F அல்லது அதற்கும் அதிகம்

| | | |
|---|---|---|
| **இருமல் அல்லது குரைப்பதுபோன்ற சத்தமுள்ள இருமல் (croup)**<br>தொடர்ச்சியானது, வழமையைவிட அதிகமாக உள்ளது, சுவாசிக்கும்போது விசிலடிப்பதுபோன்ற சத்தத்தை உருவாக்குகிறது (அஸ்மா, தொற்றுக்குப் பின்பான எதிர்வினையைக் காட்டும் காற்றுவழிகள் அல்லது அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது அவர்களுக்கு ஏற்கனவே இருக்கும் மருத்துவ நிலைமைகளுடன் தொடர்பற்றது) | ☐ ஆம் | ☐ இல்லை |
| **மூச்சுத் திணறல்**<br>மூச்சு விடுவதில் சிரமம், ஆழமாகச் சுவாசிக்க முடியாதிருத்தல் (அஸ்மா அல்லது அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது அவர்களுக்கு ஏற்கனவே இருக்கும் மருத்துவ நிலைமைகளுடன் தொடர்பற்றது) | ☐ ஆம் | ☐ இல்லை |
| **சுவை அல்லது வாசனையை உணரும் தன்மை குறைவு அல்லது இழப்பு**<br>பருவகால ஒவ்வாமைகள், நரம்பியல் ஒழுங்கீனங்கள், அல்லது அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது அவர்களுக்கு ஏற்கனவே இருக்கும் மருத்துவ நிலைமைகளுடன் தொடர்பற்றது | ☐ ஆம் | ☐ இல்லை |
| **தொண்டை நோ அல்லது விழுங்குவதில் சிரமம்**<br>விழுங்குவதில் சிரமம் (பருவகால ஒவ்வாமை, நெஞ்செரிவு, அல்லது அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது அவர்களுக்கு ஏற்கனவே இருக்கும் மருத்துவ நிலைமைகளுடன் தொடர்பற்றது) | ☐ ஆம் | ☐ இல்லை |
| **தடிமன் அல்லது மூக்கடைப்பு**<br>பருவகால ஒவ்வாமைகள், குளிருக்குள் வெளியில் நின்றமை, அல்லது அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது அவர்களுக்கு ஏற்கனவே இருக்கும் மருத்துவ நிலைமைகளுடன் தொடர்பற்றது | ☐ ஆம் | ☐ இல்லை |
| **தலையிடி**<br>வழமைக்கு விரோதமானது அல்லது நீண்ட நேரம் நிலைத்திருப்பது (பதற்றம்-வகைத் தலைவலி, நாள்பட்ட ஒற்றைத் தலைவலி, அல்லது அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது அவர்களுக்கு ஏற்கனவே இருக்கும் மருத்துவ நிலைமைகளுடன் தொடர்பற்றது) | ☐ ஆம் | ☐ இல்லை |
| **குமட்டல், வாந்தி மற்றும்/அல்லது வயிற்றோட்டம்**<br>irritable bowel syndrome - குடலுடன் தொடர்பான நோய்க்குறிகளின் தொகுதி, பதற்றம், மாதவிடாய் காலத் தசைப்பிடிப்பு, அல்லது அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது அவர்களுக்கு ஏற்கனவே இருக்கும் மருத்துவ நிலைமைகளுடன் தொடர்பற்றது | ☐ ஆம் | ☐ இல்லை |
| **அதீத களைப்பு அல்லது தசைகளில் வலி**<br>வழமைக்கு விரோதமான சோர்வு, உற்சாகமின்மை, சிசுக்கள் பால்குடிப்பதில் ஆர்வமில்லாது இருத்தல் (மனச்சோர்வு, தூக்கமின்மை, தைரொயிட் செயலிழப்பு, திடீரென ஏற்பட்ட காயம்/வலி, அல்லது அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது அவர்களுக்கு ஏற்கனவே இருக்கும் மருத்துவ நிலைமைகளுடன் தொடர்பற்றது) | ☐ ஆம் | ☐ இல்லை |

6. **மாணவரின்/சிறுவரின் வீட்டிலிருக்கும் எவருக்காவது தற்போது COVID-19 தொடர்பான புதிய நோய்க்குறிகள் இருக்கின்றதா மற்றது/அல்லது நோய்க்குறிகள் இருப்பதால் பரிசோதனை முடிவுகளுக்காக அவர் காத்திருக்கிறாரா?** ☐ ஆம் ☐ இல்லை

## முன்பரிசோதிப்புக் கேள்விகளுக்கான பெறுபேறுகள்

**! கேள்வி 1க்கு அல்லது 3க்கு “ஆம்” என நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலைக்கு அல்லது சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்லாதீர்கள்.**

- 14 நாட்களுக்கு மாணவரை/சிறுவரைத் தனிமைப்படுத்த (வீட்டில் இருத்தல்) வேண்டும், அத்துடன் பரிசோதிக்கப்படல் அல்லது மருத்துவ அவசரகால நிலை தவிர்ந்த ஏனையவற்றுக்கு அவர் வெளியே செல்லக்கூடாது.

- **“ஆம்” எனக் கேள்வி 1க்கு** , நீங்கள் பதிலளித்திருந்தால் பொதுச் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள். பொதுச் சுகாதாரப் பிரிவினர் செல்லமுடியுமெனக் கூறினால் மாணவர்/சிறுவர் பாடசாலைக்கு/சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்ல முடியும்.
    - உடன்பிறப்புகள் அல்லது உங்களின் வீட்டிலுள்ள ஏனைய நபர்கள் யாவரும் 14 நாட்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டிருக்க (வீட்டில் இருத்தல்) வேண்டும்.
- **“ஆம்” எனக் கேள்வி 3க்கு** நீங்கள் பதிலளித்திருந்தால், COVID-19 பரிசோதனை ஒன்று அவருக்குத் தேவையா என்பது உள்ளடங்கலான அறிவுரை அல்லது மதிப்பீடு ஒன்றைப் பெறுவதற்காக மருத்துவர்/ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குநர் ஒருவருடன் பேசுங்கள் எதிர்மறையான பரிசோதனை முடிவு கிடைத்திருந்தால், 14 நாட்களுக்குப் பிறகு பாடசாலைக்கு/சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு மாணவர்/சிறுவர் செல்லமுடியும்.
    - ரொறன்ரோ போன்ற இந்த மாகாணத்தின் சில பகுதிகளில் நீங்கள் வசித்தால், உடன்பிறப்புகளும் உங்களின் வீட்டிலுள்ள ஏனைய நபர்களும் 14 நாட்கள் வீட்டில் இருக்கவேண்டும். உள்ளூரில் இருக்கும் ஆபத்துக் காரணிகளே இதற்கான காரணம் ஆகும்.
    - ஒன்ராறியோவின் ஏனைய பகுதிகளில் நீங்கள் வசிக்கிறீர்கள் எனில், உடன்பிறப்புகள் மற்றும் உங்கள் வீட்டிலுள்ள ஏனைய நபர்கள் பாடசாலைக்கு, சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு அல்லது வேலைக்குச் செல்லலாம், ஆனால் வேறு அத்தியாவசியமற்ற காரணங்களுக்காக வீட்டை விட்டு வெளியேறக்கூடாது. மேலதிக விபரங்கள் பற்றி உங்களின் பாடசாலையை/சிறுவர் பராமரிப்பு நிலையத்தைக் கேளுங்கள்.
- அவருக்கு நோய்க்குறிகள் ஏற்பட்டால் அல்லது பரிசோதனையில் அவர் நேர்மறையாக இருந்தால், மேலதிக ஆலோசனைக்கு உங்களின் உள்ளூர்ப் பொதுச் சுகாதாரப் பிரிவினரை அல்லது மருத்துவரை/ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குநரைத் தொடர்புகொள்ளுங்கள்.
- இந்தப் பெறுபேறை அவர்களுக்குத் தெரிவிப்பதற்காக உங்களின் பாடசாலையை/சிறுவர் பராமரிப்பு வழங்குநரைத் தொடர்புகொள்ளுங்கள்.

**! “ஆம்” எனக் கேள்வி 2க்கு நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலைக்கு அல்லது சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்லாதீர்கள்.**

- மாணவர்/சிறுவர் தனிமைப்படுத்தப்பட (வீட்டில் இருத்தல்) வேண்டும் அத்துடன் மருத்துவ அவசரகால நிலை தவிர்ந்த ஏனையவற்றுக்கு அவர் வெளியே செல்லக்கூடாது.
- பொதுச் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள். உங்களின் உள்ளூர்ப் பொதுச் சுகாதாரப் பிரிவினர் செல்லமுடியுமெனக் கூறினால் மாணவர்/சிறுவர் பாடசாலைக்கு/சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்லமுடியும்.
- அவருக்கு நோய்க்குறிகள் ஏற்பட்டால் மேலதிக ஆலோசனைகளுக்கு உங்களின் உள்ளூர்ப் பொதுச் சுகாதாரப் பிரிவினரை அல்லது மருத்துவரை/ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குநரைத் தொடர்புகொள்ளுங்கள்.
- ரொறன்ரோ போன்ற இந்த மாகாணத்தின் சில பகுதிகளில் நீங்கள் வசித்தால், உடன்பிறப்புகளும் உங்களின் வீட்டிலுள்ள ஏனைய நபர்களும் வீட்டில் இருக்கவேண்டும். உள்ளூரில் இருக்கும் ஆபத்துக் காரணிகளே இதற்கான காரணம் ஆகும்.
- ஒன்ராறியோவின் ஏனைய பகுதிகளில் நீங்கள் வசிக்கிறீர்கள் எனில், உடன்பிறப்புகள் மற்றும் உங்கள் வீட்டிலுள்ள ஏனைய நபர்கள் பாடசாலைக்கு, சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு அல்லது வேலைக்குச் செல்லலாம், ஆனால் வேறு அத்தியாவசியமற்ற காரணங்களுக்காக வீட்டை விட்டு வெளியேறக்கூடாது. மேலதிக விபரங்கள் பற்றி உங்களின் பாடசாலையை/சிறுவர் பராமரிப்பு நிலையத்தைக் கேளுங்கள்.
- இந்தப் பெறுபேறை அவர்களுக்குத் தெரிவிப்பதற்காக உங்களின் பாடசாலையை/சிறுவர் பராமரிப்பு வழங்குநரைத் தொடர்புகொள்ளுங்கள்.

**! “ஆம்” எனக் கேள்வி 4க்கு நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலைக்கு அல்லது சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்லாதீர்கள்**

- மாணவர்/சிறுவர் தனிமைப்படுத்தப்பட (வீட்டில் இருத்தல்) வேண்டும், அத்துடன் மருத்துவ அவசரகால நிலை தவிர்ந்த ஏனையவற்றுக்கு அவர் வெளியே செல்லக்கூடாது.
- COVID-19 பரிசோதனை ஒன்றை அவர் பெற்றுக்கொள்வதற்காக மதிப்பீட்டு மையம் ஒன்றுக்குச் செல்லவும்.
    - பரிசோதனையில் அவர் எதிர்மறையாக இருந்தால் (அவருக்கு வைரஸ் தொற்றில்லை), பாடசாலைக்கு அல்லது சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு அவர் செல்லமுடியும்.

    - பரிசோதனையில் அவர் நேர்மறையாக இருந்தால் (அவருக்கு வைரஸ் தொற்றுள்ளது), உங்களின் உள்ளூர்ப் பொதுச் சுகாதாரப் பிரிவினர் செல்லமுடியுமெனக் கூறினால் மட்டுமே பாடசாலைக்கு அல்லது சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு அவர் திரும்பிச் செல்லமுடியும்.
- அவருக்கு நோய்க்குறிகள் ஏற்பட்டால் மேலதிக ஆலோசனைகளுக்கு உங்களின் உள்ளூர்ப் பொதுச் சுகாதாரப் பிரிவினரை அல்லது மருத்துவரை/ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குநரைத் தொடர்புகொள்ளுங்கள்.
- உடன்பிறப்புகள் மற்றும் உங்களின் வீட்டிலுள்ள ஏனைய நபர்கள் பாடசாலைக்கு, சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு அல்லது வேலைக்குச் செல்லலாம், ஆனால் COVID எச்சரிக்கையைப் பெற்றவர் பரிசோதனையில் எதிர்மறை முடிவைப் பெறும் வரைக்கும் அல்லது உங்களின் உள்ளூர்ப் பொதுச் சுகாதாரப் பிரிவினர் செல்லமுடியுமெனக் கூறும்வரைக்கும் வேறு அத்தியாவசியமற்ற காரணங்களுக்காக அவர்கள் வீட்டை விட்டு வெளியேறக்கூடாது.
- இந்தப் பெறுபேறை அவர்களுக்குத் தெரிவிப்பதற்காக உங்களின் பாடசாலையை/சிறுவர் பராமரிப்பு நிலையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.

! **கேள்வி 5 அல்லது கேள்வி 6 இன் கீழிருக்கும் நோய்க்குறிகள் ஏதற்காகவது “ஆம்” என நீங்கள் பதிலளித்திருந்தால், பாடசாலைக்கு அல்லது சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்லாதீர்கள்.**

- மாணவர்/சிறுவர்தனிமைப்படுத்தப்பட (வீட்டில் இருத்தல்) வேண்டும், அத்துடன் பரிசோதிக்கப்படல் அல்லது மருத்துவ அவசரகால நிலை தவிர்ந்த வேறு காரணங்களுக்காக வீட்டை விட்டு வெளியேறக்கூடாது.
- **“ஆம்” எனக் கேள்வி 5க்கு**, நீங்கள் பதிலளித்திருந்தால், COVID-19 பரிசோதனை ஒன்று மாணவருக்கு/சிறுவருக்குத் தேவையா என்பது உள்ளடங்கலான அறிவுரை அல்லது மதிப்பீடு ஒன்றைப் பெறுவதற்காக மருத்துவர்/ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குநர் ஒருவருடன் பேசுங்கள்
- **“ஆம்” எனக் கேள்வி 6க்கு** நீங்கள் பதிலளித்திருந்தால், மாணவருக்கு/சிறுவருக்கு COVID-19 பரிசோதனையில் எதிர்மறை முடிவு வந்தபின் அல்லது உங்களின் உள்ளூர்ப் பொதுச் சுகாதாரப் பிரிவினர் செல்லமுடியுமெனக் கூறியபின் அல்லது அவருக்கு வேறு நோய் இருப்பதாக நோய்கண்டறிதல் செய்யப்பட்டபின்தான் அவர் பாடசாலைக்கு/சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்லமுடியும்.
- நோய்க்குறிகள் இருந்த மாணவருக்கு/சிறுவருக்குப் பரிசோதனையில் எதிர்மறை முடிவு வரும்வரைக்கும் அல்லது உங்களின் உள்ளூர்ப் பொதுச் சுகாதாரப் பிரிவினர் செல்லமுடியுமெனக் கூறும்வரைக்கும் அல்லது அவருக்கு வேறு நோய் இருப்பதாக நோய்கண்டறிதல் செய்யப்படும்வரைக்கும் உடன்பிறப்புகள் மற்றும் உங்கள் வீட்டிலுள்ள ஏனைய நபர்கள் வீட்டில் இருக்கவேண்டும்.
- இந்தப் பெறுபேறை அவர்களுக்குத் தெரிவிப்பதற்காக உங்களின் பாடசாலையை/சிறுவர் பராமரிப்பு வழங்குநரைத் தொடர்புகொள்ளுங்கள்.

✔ **அனைத்துக் கேள்விகளுக்கும் “இல்லை” என நீங்கள் பதிலளித்திருந்தால், உங்களின் பிள்ளை ஆரோக்கியமாக இருக்கிறார் எனலாம், மேலும் அவருக்கு COVID-19 தொற்றுதல் ஏற்படவில்லை என்பது தெரிகிறது, எனவே அவர் பாடசாலைக்கு/சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்ல முடியும். இந்தப் பெறுபேறைப் பற்றிப் பணியாளர்களுக்குத் தெரிவிப்பதற்கு உங்களின் பாடசாலையால்/சிறுவர் பராமரிப்பு வழங்குநரால் ஸ்தாபிக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றவும் (பொருத்தமாயின்).**

## ஒன்ராறியோ பொதுச் சுகாதாரம் - தொடர்புத் தடமறிதல்

**கீழ்வரும் கேள்விகளுக்குப் பதிலளிப்பது தெரிவுக்குரியது** . தொடர்புத் தடமறிதலுக்காக பொதுச் சுகாதார அதிகாரிகள் மட்டும் இந்தத் தகவல்களைப் பயன்படுத்துவார்கள். தகவல்கள் யாவும் 28 நாட்களின் பின்னர் அழிக்கப்படும்.

திகதி: ______________________________

பெயர்: ______________________________

தொலைபேசி அல்லது மின்னஞ்சல்: ______________________________